## 6th Social Science Lesson 16 Questions in Tamil - குடிமையியல்

## 6. உள்ளாட்சி அமைப்பு - ஊரகமும் நகர்புறமும்

1. தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளில் தவறானது எது?
A) சேலம்
B) திருப்பூர்
C) தஞ்சாவூர்
D) கரூர்

2. இந்தியாவின் மிக பழமையான உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சி எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
A) 1588
B) 1596
C) 1688
D) 1720

3. தமிழ்நாட்டில் மாநகராட்சிக்கு அடுத்த நிலையில் உள்ள நகராட்சியில் _________க்கும் அதிகமான மக்கள்தொகை இருக்கும்.
A) 10,000
B) 50,000
C) 1,00,000
D) 10,00,000

4. தமிழ்நாட்டில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி _____________ ஆகும்.
A) அரக்கோணம்
B) அருப்புக்கோட்டை
C) இராசிபுரம்
D) வாலாஜாபேட்டை

5. கூற்று 1: நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம்.
கூற்று 2: இந்தியாவிலேயே முதல் முறையாக பேரூராட்சி என்ற உள்ளாட்சி அமைப்பு தமிழ்நாட்டில் தான் அறிமுகப்படுத்தப்பட்டது.
A) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

6. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. மாநகராட்சிக்கு இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஒருவர் ஆணையராக இருப்பார்.
2. நகராட்சிகளுக்கு அரசு அதிகாரிகள் நகராட்சி ஆணையர்களாக நியமிக்கப்படுவார்கள்.
3. பேரூராட்சியின் நிர்வாக அலுவலர் செயல் அலுவலர் ஆவார்.
A) அனைத்தும்
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 1, 3 சரி

7. மக்களுக்கும் அரசுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுவது
A) மாவட்ட ஊராட்சி
B) கிராம ஊராட்சி
C) பேரூராட்சி
D) மாநகராட்சி

8. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
A) பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படுகிறது.
B) ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்) ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
C) ஊராட்சி ஒன்றியத் தலைவரை மக்கள் நேரடியாக தேர்தலின் மூலம் தேர்ந்தெடுப்பர்.
D) வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாக அலுவலர் ஆவார்.

9. நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ___________ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.
A) 3
B) 4
C) 5
D) 6

10. __________ மக்கள்தொகை என்ற அடிப்படையில் மாவட்டம், மாவட்ட ஊராட்சி

எனப்படும் பல பகுதிகளாகப் (District Panchayat ward) பிரிக்கப்படுகின்றது.

A) 1000

B) 10000

C) 20000

D) 50000

11. கூற்று 1: மாநகராட்சித் தலைவரும் (மேயர்), நகராட்சித் தலைவரும் நேரடி தேர்தல் மூலம் மக்களால் தேர்வு செய்யப்படுகின்றனர்.

கூற்று 2: மாநகராட்சித் துணைத்தலைவரும், நகராட்சித் துணைத்தலைவரும் அந்தந்தப் பகுதி (ward) உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுவார்கள்.

A) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

12. கீழ்க்கண்டவற்றுள் கிராம ஊராட்சியின் விருப்பப் பணிகள் எவை?

1. பூங்கா அமைத்தல்

2. நூலகம் அமைத்தல்

3. விளையாட்டு மைதானம் அமைத்தல்

4. ஊர்ச் சாலைகள் அமைத்தல்

A) 1, 2, 4

B) 2, 3, 4

C) 1, 3, 4

D) 1, 2, 3

13. கிராம ஊராட்சியின் வருவாய்களில் தவறானது எது?

A) குடிநீர் இணைப்புக்கான கட்டணம்

B) நிலவரியிலிருந்து குறிப்பிட்ட பங்கு

C) கடைகள் மீதான வரி

D) பொழுதுபோக்கு வரி

14. கீழ்க்கண்டவற்றுள் மாநகராட்சியின் வருவாய்கள் எவை?

1. வீட்டு வரி 2. குடிநீர் வரி

3. தொழில்வரி 4. பொழுதுபோக்கு வரி

5. கடைகள் மீதான வரி

A) அனைத்தும்

B) 1, 2, 5

C) 2, 3, 5

D) 1, 2, 4, 5

15. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராமசபை அமைக்கப்பட்டுள்ளது.

B) கிராமசபை ஒரு நிரந்தர அமைப்பு ஆகும்.

C) கிராம சபையே மக்களாட்சி அமைப்பின் ஆணிவேராகும்.

D) கிராமசபைக்கூட்டம் ஆண்டுக்கு மூன்று முறை கூடும்.

16. தேசிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் எப்போது கொண்டுவரப்பட்டது?

A) 1991 ஏப்ரல் 24

B) 1991 ஏப்ரல் 26

C) 1992 ஏப்ரல் 24

D) 1992 ஏப்ரல் 26

17. தேசிய ஊராட்சி தினம் எப்போது அனுசரிக்கப்படுகிறது?

A) ஜனவரி 24

B) ஜனவரி 26

C) ஏப்ரல் 24

D) ஏப்ரல் 26

18. 2011இல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெண்கள் எத்தனை சதவீத இடங்களில் வெற்றிபெற்றனர்?

A) 33%

B) 35%

C) 38%

D) 39%

19. __________ ஆண்டு தமிழக அரசு பெண்களுக்கு உள்ளாட்சியில் 50% இட ஒதுக்கீடு வழங்க சட்டத்திருத்தம் செய்துள்ளது.

A) 2014

B) 2016

C) 2017

D) 2018

20. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

B) மத்திய தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை நடத்துகிறது.

C) ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளது.

winmeen.com

D) தமிழகத்தின் தேர்தல் ஆணையம் சென்னை கோயம்பேட்டில் உள்ளது.

21. மாநகராட்சியின் தலைவர் __________ என அழைக்கப்படுகிறார்.

A) மேயர்

B) கமிஷனர்

C) பெருந்தலைவர்

D) தலைவர்

22. பொருத்துக.

1. நகராட்சிகள் – i) 15

2. மாநகராட்சிகள் – ii) 148

3. மாவட்ட ஊராட்சிகள் – iii) 36

4. பேரூராட்சிகள் – iv) 561

5. ஊராட்சி ஒன்றியங்கள் – v) 385

A) i iii ii iv v

B) ii iii i v iv

C) iii v iv ii i

D) ii i iii iv v

winmeen.com